**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 20/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பெட்ரிக் பிலவேந்திரகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஜான் பீட்டர்** | **Calling** | : | **தலைமை காவலர், திண்டுக்கல் மதுவிலக்கு மற்றும் அமலாக்கப்பிரிவு** |
| **Village** | : | | **Religion** | : | **கிறிஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **43** |
| | | | **Dated** | : | **06.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**3, 4 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. பெட்ரிக் பிலவேந்திரகுமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.12.2014ம் தேதி திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது, 13.00 மணிக்கு ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. மனோகரன் அவர்களுடன் திண்டுக்கல், ஒத்தக்கண் பாலம் கல்லறைத்தோட்டம் பக்கம் சுமார் 13.00 மணியளவில் வந்தபோது, பின்னால் பெயர், விலாசம் கேட்டுத்

தெரிந்த எதிரிகள் 1. பிரபாகரன், 2. டைசன்ராஜா, 3. ஜீவரத்தினம், 4. ராஜேஷ், 5. நௌசாத் என்ற ஆனந்த் ஆகியோர்கள் நடவடிக்கையை கண்காணித்தபோது, அவர்கள் பேச்சில் தங்கள் மீது பழைய வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்து வருவதாலும், அதற்கு காசு, பணம் செலவு ஆவதாலும், கஷ்டபடுவதாகவும், சுகபோக வாழ்க்கை வாழ முடியாததால், அனைவரும் சேர்ந்து இரவு யார் வீட்டையாவது உடைத்து உள்ளே புகுந்து, கொள்ளையடித்து தலைமறைவாகிவிடவேண்டும் என பேசிக் கொண்டு இருந்தவர்களை சுற்றி வளைத்துப் பிடித்து, அதில் பிரபாகரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.15 மணிக்கு பெற்று அதன் அடிப்படையில் பிரபாகரன் எடுத்து ஆஜர் செய்த கத்தி மற்றும் இரும்பு ராடை 14.30 மணிக்கு கைப்பற்றியும், டைசன்ராஜ் ஆஜர் செய்த 100 கிராம் சக்தி மிளகாய்ப்பொடி பாக்கெட்டை 15.00 மணிக்கும், ஜீவரத்தினம் எடுத்து ஆஜர் செய்த கையுறைகள் – 5 மற்றும் நைலான் கயிறு 15.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றியும், 16.30 மணிக்கு எதிரிகள் மற்றும் கைப்பற்றினோம். அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி அத்தாட்சிகள் முறையே அ.சா.ஆ. 5 முதல் 7 வரை குறியீடு செய்யப்படுகிறன்றன.** பின்னர் வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எதிரிகளை எந்த இடத்தில், எவ்வளவு தூரத்தில் இருந்து நாங்கள் பார்த்தோம் என்று காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாகச் சொல்லப்படும் வாக்குமூலத்தினை காவல் நிலையத்தில் வைத்துத்தான் தட்டச்சு

செய்தோம் என்றால் சரிதான். எதிரிகள் எந்த இடத்தில் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த எந்த எதிரி என்ன என்ன வகையில் பேசிக் கொண்டு இருந்தார்கள் என்ற விபரத்தினை ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் பொதுவாக கடைகளில் கிடைக்கக்கூடியவை என்றால் சரிதான். எதிரிகளின் பெயர், விலாசம் போன்ற விபரங்களை யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டோம் என்ற விபரத்தினை ஆய்வாளர் விசாரணையிலோ அல்லது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த ஒரு எதிரியிடம் இருந்தும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்று கேட்டால், நினைவில்லை. அந்த தேதியில் நான் ரோந்து பணியில் இருந்ததற்கான பாக்கெட் நோட் எதையும் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால், ஒப்படைத்துள்ளேன். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது தவறாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>5-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவ இடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். அங்கு சுமார் 200 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடம் அருகே வேடபட்டி கிராமம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு ரோந்திற்கு சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள்

ஆயுதங்களை எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 5–ம் எதிரி தப்பி ஓடியதாக ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 5–ம் எதிரியிடம் இருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 5–ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 06.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.06 14:36:58 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.